## சாவகச்சேரி நகர சபை

## யாழ்ப்பாண மாவட்டம்

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 22 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 27 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 17 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

## 1.2 அபிப்பிராயம்

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய சாவகச்சேரி நகரசபையானது 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி சாவகச்சேரி நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | பொறுப்புகள் | | வருமானங்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக் கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங் களின் எண்ணிக்கை க | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | | - | | - | 06 | 483இ069 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 241இ156 | - | - | - | - |
| விடுபாடுகள் | - | | 01 | 953இ741 | - | - |

(ஆ) அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் சபைக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட எட்டு வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பிரதான பேரேட்டு மீதியின் கூட்டுத் தொகை ரூபா 7இ582இ680 ஆக இருந்ததுடன் உபபதிவேடுகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதியின் கூட்டுத் தொகை ரூபா 7இ461இ760 ஆக இருந்தது.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை
----------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 338இ155இ135 பெறுமதியுடைய 05 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு
-----------------------------------------------------

2.1 நிதிசார் விளைவுகள்
--------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 18இ043இ728 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானத்திலும் கூடிய செலவின மிகை ரூபா 7இ178இ162 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு
----------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 5இ287இ316 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 9இ769இ180 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 1,271 | 962 | 4,746 |
| குத்தகை வாடகைகள் | 13,501 | 13,899 | 534 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 769 | 638 | - |
| வேறு வருமானங்கள் | 51,678 | 57,007 | 32,366 |

2.3.2 வருமான முகாமைத்துவம்

(அ) பத்து வருடங்களுக்கு மேற்பட்ட சந்தை குத்தகை கடை வாடகை மற்றும் உரிமக் கட்டண நிலுவை ரூபா 5இ287இ316 தொடர்பாக நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 4,745,583 பெறுமதியான வீதவரிகள் நிலுவையினை அறவிடுவதற்கு சபையினால் பூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.3.3 வருமான பாதிப்பு

----------------------------

1999ம் ஆண்டிலிருந்து மின்சார செயற்பாடுகள் அணைத்தும் இலங்கை மின்சார சபையிடம் கையளிக்கப்பட்ட போதும் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வீதி மின் விளக்குகள் பொருத்துதல் சம்மந்தமாக இலங்கை மின்சார சபையுடன் ஒப்பந்தம் மேற் கொள்ளாமல் சபை நிதியில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 424,210 பெறுமதியான செலவினத்திற்கு மீளளிப்பு கிடைக்காமையால் சபைக்கு வருமான பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.4 நீதிமன்றத் தண்டப் பணம்

--------------------------------------------

வெவ்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் நீதவான் நீதிமன்றங்களிலிருந்து பெறப்பட வேண்டிய 2012ம் ஆண்டுக்கான நீதிமன்றத் தண்டப்பணங்கள் கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

2.3.5 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

----------------------------------------------------

2006,2007,2010,2011 மற்றும் 2012ம் ஆண்டுக்கான காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்ணங்கள் ரூபா 31,073,207 சிட்டையிடப்பட்டதேயன்றி அறவிடுவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

விபரம் வருமாறு:

| வருடம் | அறவிட வேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா |
|---|---|
| 2006 | 1,158,415 |
| 2007 | 1,513,430 |
| 2010 | 4,772,100 |
| 2011 | 11,796,117 |
| 2012 | 11,833,145 |
| | 31,073,207 |

2.4 சொத்து முகாமைத்துவம்

2.4.1 அறவிட வேண்டிய ஊழியர் கடன்கள்

கடந்த 5 வருடங்களுக்கு மேலாக பதவி வறிதாக்கப்பட்ட 26 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பதவியினர் கடன் நிலுவை ரூபா 121,946 இனை பிணையாளிகளிடமிருந்து அறவிடுவதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4.2 வருடாந்த இருப்புக் கணிப்புச்சபை அறிக்கை

மீளாய்வாண்டின் இருப்புக் கணிப்புச் சபைக்கு பார்வைக்கு சமர்ப்பிக்கப்படாத 83 தமிழ் நூல்கள் 09 ஆங்கில நூல்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் எதுவித ஆக்கபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி | |
| நிதி ஒழுங்கு விதி 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 295,396 பெறுமதியான நானாவித வைப்புக்கள் வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) <u>வடக்கு மாகாண சபை நிதி ஒழுங்கு விதி</u>

| | |
|---|---|
| விதி 101, 102 | காலாண்டு அடிப்படையில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் கணக்காய்வாளா் தலைமையதிபதிக்கு சமா்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |

2.6 தவறான கொடுப்பனவு

----------------------------------

மீளாய்வாண்டில் ஏப்ரல் மாதம் 2012இல் சபைக்கு ரூபா 504,980 பெறுமதியான முச்சக்கரவண்டி கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் வீதி விளக்குகள் பொருத்துவதற்காக சபைநிதி மூலம் ரூபா 13,500 இற்கு வாடகை முச்சக்கரவண்டி அமர்த்தியமைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் தவறான கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.7 நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவு

--------------------------------------------------------------

சா்வதேச மகளிா் தினம் உள்;ராட்சி வாரம் மற்றும் விழிப்புணா்வு வீதி நாடகங்களுக்கும் புகைப்பட மற்றும் ஏனைய செலவினமாக ரூபா 86,610 சபைநிதி மூலம் மேற்கொள்ளப்பட்டமை சபையின் நோக்கத்திற்கு முரணான கொடுப்பனவாகும

2.8 ஒப்பந்த நிா்வாகம்

----------------------------

அ. செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் காலதாமதம்

------------------------------------------------------------------------------

நடைமுறையாண்டின் செயற்படுத்தவென பாதீடு செய்யப்பட்ட 06 மூலதன வேலைகள் எதிா்வரும் காலங்களில் செயற்படுத்தவென ரூபா 9இ964இ815 சில்லறை கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படுத்தியுள்ளது.

ஆ. முற்றாக கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

---

நடைமுறையாண்டில் பாதீடு செய்யப்பட்ட இரண்டு மூலதன வேலைக்கான பாதீட்டுப் பெறுமதி ரூபா 3,100,000 இற்கான வேலை முற்றாக நிறைவேற்றப்படாது கைவிடப்பட்ட நிலையில் சபையினால் நிதியாண்டு இறுதியில் ரூபா 1,554,385 தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பிலிடப்பட்டிருப்பது சபையின் தூர நோக்கு செயற்பாட்டிற்கு முரணான விடயமாக காணப்படுகின்றது.

விபரம் வருமாறு:

| கைவிடப்பட்ட செயற்திட்டம் | மதிப்பீட்டுத் தொகை ரூபா |
|---|---|
| பாலையடி விநாயகர் வீதி வேலை | 800,000 |
| சந்தை தொகுதி அமைப்பு | 2,300,000 |
| | 3,100,000 |

2.9. செயற்பாடுகளில் செயற்திறனின்மை

---

பின்வரும் அவதானிப்புக்கள் பெறப்பட்டன

(அ) 2010 – 2011 ம் ஆண்டுக்கான பிராந்திய உள்;ராட்சி உதவி ஆணையாளரினால் வழங்கப்பட்ட சனசமூக நிலைய நன்கொடை ரூபா 10,000 சனசமூக நிலையத்திற்கு வழங்கப்படாது நானாவித வைப்புக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ஆ) சபையினால் செலுத்தப்பட வேண்டுமென கடந்த 5 வருடங்களுக்கு மேலாக சில்லறைக் கடனாளிகள் கணக்கில் உள்ளடக்கப்பட்ட மீதி ரூபா 291,644 அறிக்கையிடும் திகதிவரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2009ம் ஆண்டில் ஒப்பந்தகாரரிடம் அறவீடு செய்யப்பட்டு நானாவித வைப்புக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 32,815 பெறுமதியான பிடிபணம் அறிக்கையிடும் திகதிவரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் ஊழியர்களிடம் அறவீடு செய்யப்பட்ட ஊழியர் சேமலாப நிதி ரூபா 538,910 மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ரூபா 80,837 பணிப்பாளர் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு அறிக்கையிடும் திகதி வரையும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

சபையினால் போதியளவு உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. மீளளிக்கப்படற்பாலதான நானாவித வைப்பு
iii. கணக்கு
iv. மனிதவள முகாமைத்துவம்
v. நன்கொடை
vi. நிலையான சொத்துக்கள்